# பகுதி IV

# பகுதி IV

## மத்திய வங்கியினதும், இலங்கையிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினதும் கடமைகளும், தொழிற்பாடுகளும் தொடர்பான 2001ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்

பக்கம்


| | |
|---|---|
| 1. *2001ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீடு (திருத்தச்) சட்டம்* | I |
| 2. *2001ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரி (திருத்தச்) சட்டம்* | V |
| 3. *2001ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரிச் சட்டம்* | VIII |
| 4. *2001ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்* | XI |

## 2001ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க , தேசிய பாதுகாப்பு அறவீடு(திருத்தச் சட்டம்)

[2001ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### 1991 ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் இத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம் 2001ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 2000ஆம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1991ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் 3ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் மேலும் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (ஊஊ) மற்றும் (ஊஊஊ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

(ஊஊ) இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் ஏதேனும் கப்பல் அல்லது வானூர்தி, பண்டங்களின் அல்லது பயணிகளின் சர்வதேச இடப்பெயர்வுக்குப் பயன்படுத்தப்படுகின்றதென உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலையமைதிபதி திருப்திக்கு எண்பிக்கப்படின், அத்தகைய கப்பலின் அல்லது வானூர்தியின் பெறுமதி

(2) அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியின் அ என்னும் விடயத்தில் -

(அ) அதன் (viii) ஆம் உட்பந்தியை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:-

(viii) ஏதேனும் கட்டிடம் வீதி பாலம், நீர், விநியோகம், வடிகால் அல்லது கழிவு நீர் வடிகால் முறைமை, கப்பற்துறை, விமான நிலையம் அல்லது தொலைத்தொடர்புகள் அல்லது மின்சாரத்திலான ஏதேனும் உட்கட்டமைப்புக் கருத்திட்டத்தின் நிர்மாணத்துக்கான ஆனால்-

(அ) ஏதேனும் பொருளின் பொறித்தொகுதியின் எந்திர சாதனத்தின் அல்லது உபகரணத்தின் விநியோகத்திற்கான சேவைகளாகவல்லாத; அல்லது

(ஆ) உயர்தொழில் அல்லது ஆலோசனை சேவைகளாகவல்லாத.

நிர்மாண ஒப்பந்தக்காரர் அல்லது துணை ஒப்பந்தக்காரர் ஒருவரின் சேவைகள்: அத்துடன்

(ஆ) அதன் (xi) ஆம் உட்பந்தியில்.

"1972ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, கப்பல் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட கப்பற்றொழில் முகவரொருவரின் அல்லது எடுத்துச் செல்பவர் ஒருவரின்" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக,

1972ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, கப்பல் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட கப்பற்றொழில் முகவரொருவரின் அல்லது 1992ஆம் ஆண்டின் 55ஆம் இலக்க, வான் செலவு (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின்கீழ் உரிமம் பெற்ற வான் சேவை முகவரொருவரின் அல்லது எடுத்துச் செல்பவர் ஒருவரின் என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்:-.

(இ) அதன் (xi) ஆம் உட்பந்தியை உடனெடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(xiஅ) ஏதேனும் துறைமுகத்தில் வழங்கப்படும் துறைமுகத் தொழிற்பாட்டாளர் அல்லது துறைமுகக் கொள்கலன் முடிவிடத் தொழிற்பாட்டாளர் ஒருவரின் சேவைகள்:

"(xiஆ) முற்றிலும் இலங்கைக்கு வெளியே பயன்படுத்தப்படுவதற்கென அத்தகைய ஆளினால் உருவாக்கப்பட்டதும் அதற்கென வங்கியொன்றின் ஊடாக வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவு பெறப்படுவதுமான மென்பொருள் தொடர்பில் கணனி மென்பொருள் உருவாக்குநர் ஒருவரின் சேவைகள்:

(xiஇ) வெளிநாட்டு நாணயத்திலான கொடுப்பனவுக்கென இலங்கையிலுள்ள ஆளொருவரால் இலங்கைக்கு வெளியே உள்ள ஆட்களுக்கு பண்டங்களின் விற்பனையை இயலச் செய்கின்ற அல்லது அதற்கு வசதியளிக்கின்ற சேவைகளாகவுள்ள இணையச் சேவைகளைப் பிரத்தியேகமாக வழங்குவதற்கென அல்லது சேவைகளை வழங்குவதற்கென 2001 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் நிறுவப்பட்ட தொழில் முயற்சியொன்றினால் வாடிக்கையாளரின் தேவைக்கேற்ப உருவாக்கப்பட்ட மென்பொருளைப் பயன்படுத்தி இணையத்தின் ஊடாக வழங்கப்படும் சேவைகள்:

(xiஇ) வெளிநாட்டு நாணயத்திலான கொடுப்பனவுக்கென இலங்கைக்கு வெளியேயுள்ள இனம் காணப்பட்ட ஒரு வாடிக்கையாளருக்கு பிரத்தியேகமாக அத்தகைய சேவைகளை வழங்குவதற்கென 2001 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் நிறுவப்பட்ட தொழில் முயற்சியொன்றினால் இணையத்தின் ஊடாக அல்லது தொலைபேசி ஊடாக வழங்கப்படும் வாடிக்கையாளர் ஆதாரச் சேவைகள்.".

(ஈ) அதன் (ஓ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ஔ) ஏதேனும் வானூர்தியின் பயன்பாட்டுக்காக இறக்குமதி செய்யப்படும் ஏதேனும் வான்போக்குவரத்து எரிபொருளின் பெறுமதி.".

3. 2000ஆம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவு மேலும் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில், " 2000 யூலை 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும் " என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2000 யூலை 1ஆம் தேதியன்று அல்லத அதன் பின்னர் ஆனால் 2001 ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும் " என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும

"(ஔ) 2001 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும்

(i) அக்காலாண்டின் முதலாம் மாதத்திற்கு -

(அ) அவ்வாளின், இந்த உட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின் ஏழரைச் சதவீதத்திற்கும் ; அத்துடன்

(ஆ) (203ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறி அல்லாத ஏதேனும் பொறித் தொகுதியின் எந்திரசாதனத்தின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியினின்று அல்லது உற்பத்தியினின்று எழும் அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் அரைச் சதவீதத்திற்கும்,

சமமான தொகையொன்று அக்காலாண்டின் இரண்டாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று

அல்லது அதற்கு முன்னர்

(ii) அக்காலாண்டின் இரண்டாம் மாதத்திற்கு -

(அ) அவ்வாளின் இந்த உட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட் மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின் ஏழரைச் சதவீதத்திற்கும்: அத்துடன்

(ஆ) (203ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறி அல்லாத ஏதேனும் பொறித் தொகுதியின் எந்திர சாதனத்தின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியினின்று அல்லது உற்பத்தியினின்று எழும் மொத்த விற்பனை வரவில் அரைச் சதவீதத்திற்கும்,

சமமான தொகையொன்று அக்காலாண்டின் மூன்றாம் மாதாத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் : அத்துடன்

(iii) அக்காலண்டிற்கு அத்தகைய ஆளினால் இப்பந்தியின் (i)ஆம் உட் பந்தியினதும் (ii) உட்பந்தியினதும் (ii)ஆம் உப பந்தியினதும் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செலுத்தப்பட்ட தொகைகளின் கூட்டு மொத்தத்தால் குறைத்து, அவரால் செலுத்தப்படற் பாலதான விதிப்பனவுத் தொகை அக்காலாண்டை உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்.".

4. 2000ஆம்ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவைண மேலும் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வட்டவணை 11ஆம் விடயத்தில் "2000 யூலை 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2000 யூலை 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2001 ஏப்பிரல் 1ஆம் தேதிக்கு முன்னர் " என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

அத்துடன்

(2) அவ்வட்டவணையின் இறுதியில் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(12) 2001 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும் -

(i) இவ்விடயத்தின் (ii) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின் மீது 7.5%

(i) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறி அல்லாத ஏதேனும் பொறித் தொகுதியின் எந்திர சாதனத்தின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியில் அல்லது உற்பத்தியினின்று எழும் மொத்த விற்பனை வரவின் மீது 0.5 %

5. சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி, 2001 ஏப்பிறல் 1ஆம் தேதி தொடங்கும் காலப்பகுதியின்போது பொறித்தொகுதி, எந்திர சாதனம் அல்லது உபகரணம் ஒன்றல்லாத பொருளொன்றின் இறக்குமதியாளரிடமிருந்து அத்தகைய பொருளின் பெறுமதியின் ஆறரைச் சதவீதத்தை விஞ்சிய ஆனால் ஏழரைச் சதவீதத்தை விஞ்சாத தொகையொன்றைச் சேகரிக்குமிடத்து அத்தகைய சேகரிப்பு எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படவிருப்பதாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சேகரிப்பு தொடர்பில் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் எவ்வாவற்றிற்கும் எதிராக சுங்கப்பணிப்பாளர் தலைமையதிபதி இத்தால் நட்டோத்திரவாதமளிக்கவும்படுகின்றார்.

6. (1) இச்சட்டம் எவ்வாளுக்கு ஏற்புடைத்தாகின்றதோ, அவ்வாள் இச்சட்டம் பாராளுமன்றச் சட்டமெனச் சான்றுபடுத்தப்படுகின்ற தேதிக்கு முன்னரான ஏதேனும் மாதம் அல்லது காலாண்டு தொடர்பில் ஆணையாளர்

தலைமையதிபதிக்கு ஏதேனும் தொகையை செலுத்துமாறு இச்சட்டத்தின் 3ஆம் 4ஆம் பிரிவுகளால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆள், எல்லா நோக்கங்களுக்காகவும் இச்சட்டம் பாராளுமன்றச் சட்டமெனச் சான்றுபடுத்தப்படுகின்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அத்தொகையை அவர் செலுத்தினால் அப்பிரிவுகளின் தேவைப்பாடுகளோடு அவர் இணங்கியொழுகிவிட்டார் எனக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய தொகையானது அவ்வாறு செலுத்தப்படாமல் விட்டால், அத்தொகையை இச்சட்டம் பாராளுமன்றச் சட்டமெனச் சான்றுபடுத்தப்படுகின்ற தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவுற்ற பின்னர் செலுத்தப்படுவதில் தவணை தவறப்பட்டுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆள் அந்தத் தேதியிலிருந்து தவணைதவறிய ஒருவரெனக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்த ஆள், 2001 ஏப்பிறல் 1ஆம் திகதி தொடங்கி இச்சட்டம் பாராளுமன்றச் சட்டமெனச் சான்றுபடுத்தப்படுகின்ற திகதியன்று முடிவடையும் காலப்பகுதி தொடர்பில், அக்காலப்பகுதிக்கு அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் ஆறரைச் சதவீதத்தை விஞ்சிய தொகையொன்றினை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துமாறு இச்சட்டத்தின் 3ஆம் 4ஆம் பிரிவுகளால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவால் தேவைப்படுத்தப்பட்டுள்ளவிடத்து அத்தகைய ஆள் இச்சட்டம் பாராளுமன்றச் சட்டமெனச் சான்றுபடுத்தப்படுகின்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் விடயத்திற்கேற்ப இச் சட்டத்தின் 3ஆம் 4ஆம் பிரிவுகளால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவால் அவர் அக்காலப்பகுதிக்காகச் செலுத்தத் தேவைப்படுத்தப்பட்ட தொகைக்கும் அக்காலப்பகுதிக்கு அவரால் செலுத்தப்பட்ட தொகைக்குமிடையிலான வித்தியாசத்தைஅவர் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துவாராயின், அப்பரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகியிருப்பதாக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய வித்தியாசம் அவ்வாறு செலுத்தப்படாதவிடத்து, இச்சட்டம் பாராளுமன்றச் சட்டமென சான்றுபடுத்தப்படுகின்ற தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவுற்றதன் பின்னர் அத்தகைய வித்தியாசம் தவனை தவறப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்திகதியிலிருந்து அத்தகைய ஆள் முதன்மைச் சட்டவாக்கத்தின் கருத்தெல்லைக்குள் தவணை தவறிய ஒருவராகக் கருதப்படுதலும் ண்டும்.

7. இச்சட்டத்தின் 2ஆம் பிரிவால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தமானது-

(அ) அத்திருத்தம் அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஊஊ) மற்றும் (ஊஊஊ) என்னும் பந்திகளை நீக்கம் செய்தல் தொடர்பிலானதாயிருக்கும்வரை எல்லா நோக்கங்களுக்காகவும் 2001 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்திருத்தம் துணை ஒப்பந்தக்காரர்களைத் தொடர்புறுத்தும் வரை எல்லா நோக்கங்களுக்காகவும் 2001 சனவரி 1ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) அத்திருத்தம் துறைமுகத் தொழிற்பாட்டாளர்களையும் துறைமுகக் கொள்கலன் முடிவிடத் தொழிற்பாட்டாளர்களையும் தொடர்புறுத்தும்வரை எல்லா நோக்கங்களுக்காகவும் 2000 பெப்புருவரி 15ஆந் திகதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

அத்துடன்

(ஈ) அத்திருத்தம் கணனி மென்பொருள் உருவாக்குநர்களைத் தொடர்புறுத்தும் வரை, 2001 மாச்சு 8ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

(உ) அத்திருத்தம் கப்பல்களை அல்லது வானூர்திகளை இறக்குமதி செய்தலைத் தொடர்புறுத்தும்வரை, எல்லா நோக்கங்களுக்காகவும் 1999 சனவரி 1ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாக கருதப்படுதல் வேண்டும்" : அத்துடன்

(ஊ) அத்திருத்தம் வான் போக்கு எரிபொருளை இறக்குமதி செய்தலைத் தொடர்புறுத்தும்வரை, எல்லா நோக்கங்களுக்காகவும் 2001 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

8. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2001ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரி (திருத்தச்) சட்டம்

*[ 2001ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

### 1996ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பள மீதான வரிச் சட்டத்தை திருத்துவதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

1. இச்சட்டம் 2001ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும். 2000ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1996ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச்சட்டத்தின் 7ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "சைபர் வீதமிடப்படுதல் வேண்டும்"என்னும் சொற்களுக்குப் பதிலாக "சைபர் வீதமிடப்படுதல் வேண்டும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்தியைச் சோப்பதன் மூலமும்:-

"(ஈ) பின்வரும் எவையேனும் சேவைகள் சைபர் வீதமிடப்படுதல் வேண்டும் -

(i) முற்றிலும் இலங்கைக்கு வெளியே பயன்படுத்தப்படுவதற்கென அத்தகைய ஆளினால் உருவாக்கப்பட்டதும் அதற்கென வெளிநாட்டு நாணயத்தில் வங்கி ஒன்றுக்கூடாகக் கொடுப்பனவு பெறப்படுவதுமான மென்பொருள் தொடர்பில் கணனி மென்பொருள் உருவாக்குநர் உருவரின் சேவைகள், அத்தகைய சேவைகள் வழங்கப்படுதலைப்பற்றி ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியுறும் வகையில் ஆவணச்சான்று முன்வைக்கப்படுமிடத்து மாத்திரம்;

(ii) வங்கி ஒன்றுக்கூடாக வெளிநாட்டு நாணயத்திலான கொடுப்பனவு பெறப்படும் இலங்கைக்கு வெளியே இனம் காணப்பட்ட ஒரு வாடிக்கையாளருக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு பிரத்தியேகமாக அத்தகைய சேவைகளை வழங்குவதற்கென 2001 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் நிறுவப்பட்ட தொழில் முயற்சியொன்றினால் இணையத்தின் ஊடாக அல்லது தொலைபேசி ஊடாக வழங்கப்படும் வாடிக்கையாளர் ஆதாரசேவைகள்".

இரண்டாயிரமாம் ஆண்டின் 26ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது.

(1) "அத்தகைய மீளளிப்பு வருமதியாகும் அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் இறுதியில்" என்றும் சொற்களுக்குப் பதிலாக, அத்தகைய மீளளிப்புக்கான "விண்ணப்பம் செய்யப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் இறுதியில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவுக்கான காப்பு வாசகத்தின் (ஈ) என்னும் பந்தியில் "நேர்முன்னராகவரும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "முன்னராகவரும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

4. 1998 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 58ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது. :-

"ஆயின் எவ்வாறாயினும் 22ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ), அல்லது (ஈ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்டவரான பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரால் மிதமிஞ்சிச் செலுத்தப்பட்ட

ஏதேனும் அத்தகைய தொகை விரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் இறுதி அல்லது மிகை ஏற்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கான விவரத்திரட்டு கிடைக்கப்பெற்ற திகதி என்பவற்றுள் எது பிந்தியதோ அதிலிருந்து ஒரு மாதத்திற்குள் அவ்வாளுக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்".

5) 2000ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஆம் பிரிவு, "வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி" என்பதன் வரைவிலக்கணத்தின் (அ) என்னும் பந்தியில் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.:

(1) அப்பந்தியின் (V)ஆம் உட்பந்தியில், "அட்டவணையின்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "2001 ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர், அட்டவணையின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பந்தியின் இறுதியில் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(VII)ஆளெவரும் அட்டவணையின் (XXVIII) ஆம் விடயத்தில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளவாறு முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளதுடன் அத்தகைய ஆள் 2001 மாச்சு 31 ஆம் தேதியளவில் உடன்படிக்கை தொடர்புறுத்தும் கருத்திட்டத்தின் கீழ் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்கள் செய்வதனைத் தொடங்க முடியாதவராயிருந்தவிடத்து."

6 இரண்டாயிரமாம் ஆண்டின் 26ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:

(1) அட்டவணையின் (XXIII) ஆம் விடயத்தில் "முப்பது பிரயாணிகளின் ஆசனங்களுக்குக் குறையாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருபத்தெட்டு பிரயாணிகளின் ஆசனங்களுக்குக் குறையாத" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:-

(2) அவ்வட்டவணையின் (XXVIII) ஆம் விடயத்தில், "உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பொருளின் இறக்குமதி" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:

"(அ) (i) கருத்திட்டம் பூர்த்தியானதன் பின்னர் வரிக்குப் பொறுப்பான வழங்கல்களை மாத்திரம் செய்யும் எவரேனும் ஆளின் விடயத்தில் , நியமித்த தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு;

(ii) கருத்திட்டம் பூர்த்தியானதன் பின்னர் விலக்களிக்கப்பட்ட வழங்கல்கள் மாத்திரம் செய்யும் ஆளொருவரின் விடயத்தில், நியமித்த தேதியிலிருந்து நான்கு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு; அல்லது

(ஆ) கருத்திட்டம் பூர்த்தியாகும்வரை,

இவற்றுள் எந்தக் காலப்பகுதி முந்தியதோ அந்தக் காலப்பகுதிக்கு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட எதேனும் பொருளின் இறக்குமதி;

(3) அவ்வட்டவணையின் (XXXII)ஆம் விடயத்தை நீக்கம்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும்:-

"(XXXII)இரண்டாயிரத்து ஒன்று ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ள தொழில்முயற்சியொன்றினால் வழங்கப்படுவதும் அத்தகைய உடன்படிக்கை தொடர்புறுத்தும் கருத்திட்டத்தின் மொத்தச் செலவு பத்து மில்லியன் ஐக்கிய அரசு டொலர்களுக்கு அல்லது வேறு ஏதேனும் நாணயத்தில் அதற்குச் சமமான தொகைக்குக் குறையாததும் அத்துடன் கருத்திட்டம் பிரத்தியேகமாக மேற்கூறப்பட்ட வழங்கலை, குத்தகையை அல்லது வாடகையைத் தொடர்புறுத்துகின்றதுமான வதிவிட வசதியின் வழங்கல், குத்தகை அல்லது வாடகை தவிர்ந்த வதிவிட வசதியின் வழங்கல், குத்தகை அல்லது வாடகை": அத்துடன்

(4) அவ்வட்டவணையின் (XXXIV)ஆம் விடயத்தை நீக்கம்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

("XXXIV) இரண்டாயிரத்து ஒன்று ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது, அதன்பின்னர், 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ள மருத்துவ நிறுவனமொன்றினால் வழங்கப்படுவதும் அத்தகைய உடன்படிக்கை தொடர்புறுத்தும் கருத்திட்டத்தின் மொத்தச் செலவு பத்து மில்லியன் ஐக்கிய அரசு டொலர்களுக்கு அல்லது வேறு ஏதேனும் நாணயத்தில் அதற்குச் சமமான தொகைக்குக் குறையாததுமான சுகாதார பராமரிப்புச் சேவைகளின் வழங்கல் தவிர்ந்த அத்தகைய பராமரிப்பை வழங்கும் மருத்துவ நிறுவனங்களால் அல்லது உயர்தொழில் தகைமைபெற்ற ஆட்களினால் வழங்கப்படும் எல்லா சுகாதார பராமரிப்பு சேவைகளின் வழங்குகை"

7) (1) இச்சட்டத்தின் 2(2) ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தம், அத்தகைய திருத்தம் கணணி மென்பொருளைத் தொடர்புறுத்துகின்றவரை, 1998 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 6 (1) ஆம் பிரிவால் முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணைக்குச் செய்யப்பட்ட திருத்தம் 2000 யூலை 13ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

8. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2001ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரிச் சட்டம்

*[ 2001ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**2001 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்காக வருமானவரி விதிக்கப்படற்குரிய ஒவ்வொரு கம்பனியின் மீதும், அத்தகைய கம்பனியால் அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்குச் செலுத்தப்படற்பாலதான வருமானவரியைத் தொடர்புறுத்திப் பார்ப்பதன் மூலம் மிகைவரியொன்றை விதிப்பதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 2001ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதனகத்துப்பின்னர் "இயைபான ஆண்டு" என இச்சட்டத்தில் குறிப்பீடு செய்யப்படுகின்றதான 2001 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டு, எதற்குமென உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் வருமானவரி விதிக்கப்படற்குரியதாக உள்ளதான கம்பனி ஒவ்வொன்றும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இயைபான ஆண்டு ஒன்றுக்கென கம்பனியால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியின் மீது, அத்தகைய வருமானவரியின் இருபது சதவீதப்படி கணக்கிடப்படும் (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "மிகைவரி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மிகைவரியொன்றைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

3. இச்சட்டத்தின் கீழ் மிகைவரி செலுத்துவதற்கு ஆளாகும் ஒவ்வொரு கம்பனியும், வரிமதிப்பீடு எதுவும் அதன்மீது செய்யப்படவில்லை என்பது எவ்வாறிருப்பினும் இயைபான ஆண்டிற்கு அதனால் செலுத்தப்படற்பாலதான மிகைவரியின் தொகையின்-

(அ) ஐம்பது சதவீதத்திற்குக் குறையாத தொகையொன்றை 2001 ஓகத்து 15ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும் : அத்துடன்

(ஆ) மீதிக்குச் சமமான தொகையொன்றை 2001 நவெம்பர் 15ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்.

ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படற்பாலதான அத்தகைய தொகை இச்சட்டத்தில் இதனகத்துப் பின்னர் "தவணைக் கொடுப்பனவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

4. (1) ஏதேனும் கம்பனியால் இயைபான ஆண்டொன்றுக்குச் செலுத்தப்படற்பாலதான மிகைவரியின் தவணைக் கட்டணமொன்று அல்லது அத்தகைய தவணைக் கட்டணத்தின் பாகம், அத்தகைய தவணைக் கட்டணத்தின் கொடுப்பனவுக்கென 3ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படாதவிடத்து, மிகைவரியின் அத்தகைய தவணைக் கட்டணம் அல்லது அதன் பாகம் தவணை தவறியதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் இச் சட்டத்தின் நோக்கங்களுக்கு அத்தகைய கம்பனி தவணை தவறிய ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் மிகைவரி அல்லது அதன் ஏதேனும் பாகம் தவணை தவறியிருக்குமிடத்து, தவணை தவறியவர் தவணை தவறியுள்ள மிகைவரியுடன் மேலதிகமாக -

(அ) தவணை தவறியுள்ள தொகையின் பத்துச் சதவீதத்திற்குச் சமனான பணத் தொகையொன்றையும்: அத்துடன்

(ஆ) தவணை தவறியுள்ள ஏதேனும் தொகை, அது தவணை தவறத் தொடங்கிய பின்னர் முப்பது நாட்கள் முடிவடைவதற்கு முன்னர் செலுத்தப்படாதிருக்குமிடத்து, அது தவணை தவறியிருக்கின்ற முப்பது நாட்களைக் கொண்ட, மேலதிகக் காலப்பகுதி அல்லது அத்தகைய காலப்பகுதியின் பாகம் ஒவ்வொன்றும் தொடர்பில் தவணை தவறியுள்ள தொகையின் இரண்டு சதவீதத்திற்குச் சமமான மேலதிகப் பணத்தொகையையும்,

தண்டப்பணமொன்றாகச் செலுத்துதல் வேண்டும்.

ஆயின்

(அ) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் தண்டப்பணமொன்றாகச் செலுத்தப்படற்பாலதான மொத்தத் தொகை, எந்த விடயத்திலும் தவணை தவறியுள்ள மிகைவரியின் ஐம்பது சதவீதத்தை விஞ்சுதலாகாது;

(ஆ) இச் சட்டத்தின்கீழ் இயைபான ஆண்டிற்கு மிகைவரி செலுத்துவதற்கு ஆளாகின்ற ஏதேனும் கம்பனி.

2000 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் அதனால் செலுத்தப்படற்பாலதான வருமானவரித் தொகையின்–

(i) பத்துச் சதவீதத்திற்கு குறையாத தொகையை அக்கம்பனியால் செலுத்தப்படற்பாலதான தவணைக் கட்டணமாக 2001 ஓகத்து 15ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும், அத்துடன்

(ii) பத்துச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை கம்பனியால் செலுத்தப்படற்பாலதான தவணைக் கட்டணமாக 2001 நவெம்பர் 15ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்.

செலுத்துகின்றவிடத்து, அத்தகைய கம்பனி அதனால் மேலே உறப்பட்டவாறு அதனால் செலுத்தப்பட்ட பணத்தொகைகளின் கூட்டுமொத்தத்தின்மீது, அந்த இயைபான ஆண்டுக்கு செலுத்தப்படற்பாலதான மிகைவரியின் விஞ்சிய தொகையை 2002 நவெம்பர் 30ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தினால், இபிபிரிவின் கீழ், தண்டப்பணம் எதனையும் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

(இ) இப்பிரிவின் கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தண்டப் பணத்தின் குறைப்பு அல்லது விட்டுவிடுகை, விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளிலும் நியாயமானதும் ஒப்புரவானதும் என ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தோற்றுமாயின், ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய தண்டப்பணத்தைக் குறைக்கலாம் அல்லது விட்டுவிடலாம்.

5. உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வருமானவரி தொடர்பிலான விவரத்திரட்டுக்களைக் கொடுத்துதவுதல், வரிமதிப்பீடு, மதிப்பீடுகளுக்கெதிரான மேன்முறையீடுகள், வரிமதிப்பீட்டை முடிவு செய்தல், அத்தகைய வரியின் அறவீடு, மீளக் கொடுப்பனவு அத்துடன் நானாவித விடயங்கள், தண்டங்கள், தவறுகள், நிர்வாகம் மற்றும் அத்தகைய வரி தொடர்பிலான பொதுவிடயங்கள் என்பன தொடர்பில் அச்சட்டத்தின் XII ஆம் அத்தியாயத்தினதும் XVIII முதல் XX ஆம் அத்தியாயத்தினதும் XXII முதல் XXVII வரையிலான அத்தியாயங்களினதும் ஏற்பாடுகள் இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான மிகைவரி தொடர்பில் விவரத் திரட்டுக்களைக் கொடுத்துதவுதல், மதிப்பீடு, மதிப்பீட்டிற்கெதிரான மேன்முறையீடுகள், அத்தகைய மிகைவரியின் அறவீடு, மீளளிப்பு நானாவித விடயங்கள் தண்டங்கள், தவறுகள், நிர்வாகம் அத்தகைய மிகைவரி தொடர்பிலான பொது விடயங்கள் என்பவற்றிற்கு, பின்வரும் திரிபுகளுக்கு அமைவாக, ஏற்புடையனவாதல் வேண்டும் :–

(அ) ஏதேனும் கம்பனி இச்சட்டதின் கீழ் ஓர் இயைபான ஆண்டுக்கான அதனால் செலுத்தப்படற்பாலதான மிகைவரியின் விவரத் திரட்டைக் கொடுத்துதவ வேண்டுமென இச்சட்டத்தின் மூலம் அதன்மீது சுமத்தப்பட்ட தேவைப்பாடு, அத்தகைய கம்பனி உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 98ஆம் பிரிவின் (1)ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் அவ்வாண்டிற்கான அதன் வருமானத்தின் விவரத் திரட்டைக் கொடுத்துதவுமாயின், போதியளவில் இணங்கியொழுகப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) வரி மதிப்பீட்டாளர் ஒருவர், எவரேனும் கம்பனியின் மீது உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் ஏதேனும் இயைபான ஆண்டுக்கான அத்தகைய கம்பனியால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியின் வரிமதிப்பீடொன்றைச் செய்யுமிடத்து, வரிமதிப்பீட்டாளர், அதே நேரத்தில் அதே படிவத்திலும, இச்சட்டத்தின் கீழ் அவ்வாண்டிற்காக அத்தகைய கம்பனியால் செலுத்தப்படற்பாலதான மிகை வரியின் விடயத்திற்கேற்றாற்போல வரிமதிப்பீடு ஒன்றை அல்லது மேலதிக வரிமதிப்பீடொன்றைச் செய்யலாம். விடயத்திற்கேற்றாற்போல, வரிமதிப்பீடுகள் அல்லது மேலதிகவரி மதிப்பீடுகள், அந்தந்தச் சட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட வெவ்வேறான வரிமதிப்பீடுகளாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) ஏதேனும் இயைபான ஆண்டுக்காக , உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் எவரேனும் கம்பனிமீது விதிக்கப்படும் வருமானவரியின் தொகையினைக் கூறுகின்ற வரிமதிப்பீட்டு அறிவித்தல், உண்ணாட்டு அரசிறைச் சட்டத்தின் 135ஆம் பிரிவிள் கீழ் அத்தகைய கம்பனிக்குக் கொடுக்கப்பட்டவிடத்து, அத்தகைய அறிவித்தல், அந்த ஆண்டுக்காக இச் சட்டத்தின் கீழ் அத்தகைய கம்பனியின்மீது விதிக்கப்படும் மிகைவரியின் தொகையையும் உள்ளடக்கலாம். இவ்வறிவித்தல்கள் அந்ததந்தச் சட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட வெவ்வேறான அறிவித்தல்களாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) ஏதேனும் இயைபான ஆண்டுக்காக, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் ஏதேனும் கம்பனியால் செலுத்தப்படற்பாலதான வருமானவரி மதிப்பீடொன்றிற்கெதிராக மேன்முறையீடொன்று செய்யப்படுமிடத்து, அத்தகைய மேன்முறையீடு, அந்த ஆண்டுக்காக, இச்சட்டத்தின் கீழ் அத்தகைய கம்பனியால் செலுத்தப்படற்பாலதான மிகைவரிக்கு எதிராக மேன்முறையீடொன்றையும் உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறே தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(உ) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் XXII ஆம் அத்தியாயத்தின் கீழ் நீதிவானொருவருக்குச் சான்றிதழொன்று வழங்கப்பட்டவிடத்து அல்லது ஏதேனும் கம்பனிக்கு கூற்றொன்று அல்லது சான்றிதழொன்று வழங்கப்பட்டவிடத்து விடயத்திற்கேற்றாற்போன்று, அத்தகைய அறிவித்தல், கூற்று அல்லது சான்றிதழானது, இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் தவணை தவறிய மிகைவரியின் விபரங்களையும் உள்ளடக்கலாம். விடயத்திற்கேற்றாற்போன்று அத்தகைய நீதிவானுக்கு வழங்கப்பட்ட அத்தகைய சான்றிதழ்களும் ஏதேனும் கம்பனிக்கு வழங்கப்பட்ட அத்தகைய அறிவித்தல்கள், கூற்றுக்கள் அல்லது சான்றிதழ்கள் என்பனவும் அந்தச் சட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட வெவ்வேறான சான்றிதழ்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

6. இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

7. இச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினால் அன்றி -

"வரி மதிப்பீட்டாளர்", என்பது "ஆணையாளர் தலைமையதிபதி", "வதிவற்ற கம்பனி", "வதிவுள்ளகம்பனி", "வரிமதிப்பீட்டாண்டு" என்பன உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் அவற்றிக்கெனக் குறித்தொதுக்கப்பட்ட அவ்வப் பொருள்களை உடையனவாகும்;

"கம்பனி" என்பது இலங்கையில் அல்லது வேறெங்கும் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கம்பனி என்று பொருள்படும் என்பதுடன் பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றை உள்ளடக்குவதாக கருதப்படுதலும் வேண்டும்.

"வருமானவரி" என்பது, இயைபான ஆண்டு தொடர்பிலும், அத்துடன் -

(i) வதிவுள்ள கம்பனியொன்று தொடர்பாகவும், அந்த இயைபான ஆண்டுக்காக அக்கம்பனியால் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ்;

  (அ) அவ்வாண்டிற்கு மேற்போந்த சட்டத்தின் 53ஆம் பிரிவின் (1)ஆம் பிரிவின் (ஆ), (இ) அல்லது (ஈ) என்னும் பந்தியின் கீழ் அக்கம்பனியால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமானவரியினதும் :

  (ஆ) அக் கம்பனிக்கு மேற்போந்த சட்டத்தின் 92 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் நியதிகளின்படி அல்லது 93ஆம் பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட வருமானவரியிலிருந்தான ஏதேனும் நிவாரணத்தின் கூட்டு மொத்தத்தை அதிலிருந்து கழித்த பின்னரான

  செலுத்தப்படற்பாலதான வருமானவரி எனப் பொருள்படும்;

(ii) வதிவற்ற கம்பனியொன்று தொடர்பாக, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் இயைபான ஆண்டுக்காக அக்கம்பனியினால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமான வரியைக் கழித்து, அந்த ஆண்டுக்காக அக்கம்பனியால் மேற்போந்த சட்டத்தின் 57ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியின் கீழ் அல்லது (ii) ஆம் உட்பந்தியின் கீழ் செலுத்தப்படற்பாலதான வருமானவரி எனப் பொருள்படும்;

"உண்ணாட்டரசிறைச் சட்டம்" என்பது, 2000ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் எனப்பொருள்படும்.

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தைத் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டுள்ளதும் மானியக் கொடை அல்லது கடன் என்ற வகையில் அல்லது வேறு வடிவத்தில் முற்றிலும் அல்லது பகுதியளவில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மூலதனத்தைக் கொண்டதுமான ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது குழுமம் என்று பொருள்படும்.

## 2001ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

*[ 2001ஆம் ஆண்டு யூலை மாதம் 24ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

## 2000ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 2001ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இதனகத்துப் பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும் 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 8ஆம் பிரிவு அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பந்தியின் (lxxiii) ஆம் உட்பந்தியில் "இலங்கை இந்திய மன்றத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இலங்கை இந்திய மன்றத்தின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பந்தியின் முடிவில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்;

(lxxiv)ஐரோப்பிய முதலீட்டு வங்கியின்,

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பரிவின் (ஊ) என்னும் பந்தியில் "செஞ்சிலுவைச் சங்கக் குழுவினால் அல்லது உலகைப் பேணிக்காத்தல் சங்கத்தினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "செஞ்சிலுவைச் சங்கக் குழுவினால் உலகைப் பேணிக்காத்தல் சங்கத்தினால் அல்லது ஐரோப்பிய முதலீட்டு வங்கியினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:

(அஅ) 2001 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் ஏதேனும் வியாபாரத்தை, தொழிலை, உயர்தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற வதிவுள்ள ஒரு கம்பனியினால் அல்லது பங்காண்மையால் அந்த வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய வியாபாரத்தை, தொழிலை, உயர்தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலைக் கொண்டு நடாத்துகையில் அல்லது பிரயோகிக்கையில் (ஏதேனும் நிர்மாணக் கருத்திட்டம் தொடர்பிலான சேவைகள் உட்பட) அக்கம்பனியால் அல்லது பங்காண்மையால் இலங்கைக்கு வெளியே ஆற்றப்பட்ட சேவைகள் தொடர்பில் அக்கம்பனியால் அல்லது பங்காண்மையால் ஈட்டப்பட்ட இலாபங்களும் வருமானமும் (நியாயமான செலவுகளாக ஆணையாளர் தலைமை அதிபதியால் கருதப்படுகின்றவாறு அக்கம்பனியால் அல்லது பங்காண்மையால் இலங்கைக்கு வெளியே செலவிடப்பட்ட ஏதேனும் அத்தகைய தொகையைக் கழித்து) ஒரு வங்கியின் ஊடாக இலங்கைக்கு அனுப்பப்படின், அத்தகைய இலாபங்களும் வருமானமும்;

5. பதினெட்டாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 18அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

18அ (1) தொழிலை 2001 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற, (2)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியிலிருந்து, 3ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள்ளான ஏதேனும் கம்பனியின் இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்து தேறும் இலாபங்களையும் வருமானத்தையும் தவி) பொறுப்பு முயற்சியின் இயல்பையும் பொறுப்பு முயற்சியில் செய்யப்பட்ட முதலீட்டையும் கருத்திற் கொண்டு, ஒழுங்குவிதியால் விதித்துரைக்கப்படக் கூடியவாறு இருபது ஆண்டுகளை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய விலக்களிப்புக் காலப்பகுதியானது அத்தகைய பொறுப்பு முயற்சி தொழிலைக் கொண்டு நடாத்தத் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து கணிப்பிடப்படும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், உள்ளகக் கட்டமைப்பு வசதியொன்றை அபிவிருத்தி செய்வதற்கும் அல்லது பேணுவதற்கும் தொழிற்படுத்துவதற்கும் அல்லது அபிவிருத்தி செய்வதற்கும் பேணுவதற்கும் அத்துடன் தொழிற்படுத்துவதற்குமான பொறுப்பு முயற்சியொன்றை கொண்டுநடாத்துவதில் மாத்திரம் ஈடுபட்டுள்ள ஒரு கம்பனியாக நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியாவசியமானதாக இருப்பதாக அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் கட்டைளயால் அங்கீகரிக்கப்பட்ட கம்பனியொன்றிற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இப்பிரிவில் "உள்ளக கட்டமைப்பு வசதி" என்பது ஒரு குதம், களஞ்சியம், கைத்தொழிற்பேட்டை, உடல்நலம்பேணல் அல்லது திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டம் அல்லது மின்சார அல்லது நீர் விநியோகத்திற்கான அல்லது நகர வீடமைப்புத் திட்டத்திற்கான கருத்திட்டம் என்று பொருள்படும்."

6. இருபதாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

20அ. (1) கைப்பணிகளுக்கான ஏற்றுமதிச் சந்தையை ஊக்குவிக்கும் அவசியத்தைக் கருத்திற்கொண்டு கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான கைப்பணிப் பொருட்களின் அத்தகைய வகுதியை ஏற்றுமதி செய்வதற்கானதும் அத்துடன் 1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேசிய அருங்கலைகள் பேரவையும் அதை மருவிய நிறுவனங்களும் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கைப்பணிகள் சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய உற்பத்தி நியமங்களுக்கு இசைந்தொழுகுகின்றதும், ஆன ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து, 2001 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2004, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்குமாக, எவரேனுமாளின் அல்லது பங்காண்மையின் ஏற்றுமதி இலாபங்களையும் வருமானத்தையும் கொண்டதும், 3ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்டதுமான இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவில் -

"ஏற்றுமதி இலாபங்களும் வருமானமும்" என்பது, ஒராள் அல்லது ஒரு பங்காண்மை மற்றும் ஒரு வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட பொறுப்புமுயற்சியிலிருந்து அவ்வரிமதிப்பீட்டாண்டிற்காக அவ்வாளின் அல்லது பங்காண்மையின் இலாபங்களுக்கும் வருமானத்துக்கும் மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்து பெறப்படும் இலாபங்களும் வருமானமும் தவிர 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட) அவ்வரிமதிப்பீட்டாண்டிற்காக அவ்வாளின் அல்லது பங்காண்மையின் ஏற்றுமதி மொத்த விற்பனைவரவு, அவ்வரிமதிப்பீட்டாண்டிற்காக அவ்வாளின் அல்லது பங்காண்மையின் மொத்த விற்பனைவரவுக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தைக் கொண்டுள்ள பணத்தொகை என்று பொருளாகும்.

"ஏற்றுமதி மொத்தவிற்பனைவரவு" என்பது ஓராள் அல்லது ஒரு பங்காண்மை மற்றும் ஒரு வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக (மூலதனச் சொத்துக்களின் விற்பனையினால் பெறப்படும் அல்லது பெறப்படற்பாலதான ஏதேனும் தொகை தவிர (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய வகுதியினவான கைப்பணிப் பொருட்களின் ஏற்றுமதியிலிருந்தும் அத்தகைய நியமங்களுக்கு இசைந்தொழுகுகின்றதாயும் அவ்வரிமதிப்பீட்டாண்டில் அவ்வாளினால் அல்லது பங்காண்மையினால் பெறப்படும் அல்லது பெறப்படற்பாலதான மொத்தத் தொகை என்று பொருளாகும்;

"கைப்பணிப்பொருள்" என்பது, முற்றிலும் அல்லது பிரதானமாகக் கையினால் செய்யப்பட்ட அலங்காரப் பெறுமதிகொண்ட ஒரு பொருள் என்று பொருளாகும்;

"மொத்த விற்பனைவரவு" என்பது, ஓராள் அல்லது ஒரு பங்காண்மை மற்றும் ஒரு வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக (ஏதேனும் மூலதனச் சொத்தின் விற்பனையினால் பெறப்படும் அல்லது பெறப்படற்பாலதான ஏதேனும் தொகை தவிர) அவ்வரிமதிப்பீட்டாண்டில் அவ்வாளினால் அல்லது பங்காண்மையினால் பெறப்படும் அல்லது பெறப்படற்பாலதான மொத்தத் தொகை என்று பொருளாகும்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம்:-

"(8) இலங்கைத் தரைப்படை, இலங்கைக் கடற்படை, இலங்கை வான்படை அல்லது இலங்கைப் பொலிசுப்படை உறுப்பினர்களின் அத்துடன் அவரவர் குடும்பத்தினரின் நலனுக்காக நிதியமொன்று அல்லது சங்கமொன்று நிறுவப்பட்டுள்ளவிடத்து ஆணையாளர் தலைமை அதிபதி, அவர் விதித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய விடயத்திற்கேற்ப, அத்தகைய நிதியத்தால் அல்லது சங்கத்தால் செலுத்தப்படற்பாலதான வரியைக் குறைப்பது அல்லது தணிப்பது விடயத்தின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நீதியானதும் ஒப்புரவானதுமாகும் என ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தோன்றினால் அத்தகைய வரியைக் குறைக்கலாம் அல்லது தணிக்கலாம்."

(2) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பிற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம்:-

"கம்பனிகள் தவிர்ந்த வேறு ஆட்கள் மீதான வருமான வரி வீதங்கள்"

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய உயர் தொழிலை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2001 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய உயர் தொழிலை" என்னும் சொற்களையும் எண்களையும் இடுலதன் மூலமும்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில்-

(அ) "(1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதும் 2001 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்றதுமான" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (அ) என்னும் பந்தியில் -

(i) "வருமானத்தின் இயைபான பாகம், அத்தகைய வருமானத்தை விஞ்சினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வருமானத்தின் இயைபான பாகம் அத்தகைய வேதனாதிகள் கட்டணங்களின் தொகையை விஞ்சினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் : அத்துடன்

(ii) அப்பந்தியின் (1)ஆம் உட்பந்தியில் "அத்தகைய வருமானத்துக்குச் சமமான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய வேதனாதிகள் கட்டணங்களின் தொகைக்குச் சமமான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் : அத்துடன்

(இ) அதன் (ஆ) என்னும் பந்தியில் "அத்தகைய வருமானத்தை விஞ்சாவிட்டால்" , என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய வேதனாதிகள் கட்டணங்களின் தொகையை விஞ்சாவிட்டால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவினைச் சேர்ப்பதன் மூலமும்:-

(3) எவரேனும் தனியாளின், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதும் 2001 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்றதுமான ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், அவரினால் சம்பாதிக்கப்பட்ட அல்லது அத்தகைய உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட இலங்கையிலுள்ள ஏதேனும் பங்குடமையிலிருந்தான அவரது இலாபப் பங்கு என்ற வகையாக அவருக்குத் திரண்ட (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் வேதனாதிகளையும் கட்டணங்களையும் உள்ளடக்குகின்றவிடத்து அத்தகைய வருமானத்தை கொண்டிருக்கின்றவாறான வருமானத்தின் அத்தகைய பாகமொன்றின்மீது (இது இப்பிரிவின் இதனகத்துப் பின்னர் "வருமானத்தின் இயைபான பாகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) செலுத்தப்படற்பாலதான வருமானவரிவீதம் பத்துச் சதவீதத்தை விஞ்சுகின்றவிடத்து அப்போது வருமானத்தின் இயைபான பாகம் தொடர்பில் வரியானது பின்வருமாறு கணிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) வருமானத்தின் இயைபான பாகம், அத்தகைய வேதனாதிகள் கட்டணங்களின் தொகையை விஞ்சினால்–

(i) அத்தகைய வேதனாதிகள் கட்டணங்களின் தொகைக்குச் சமமான வருமானத்தின் இயைபான பாகத்தின் அத்தகைய பகுதியின்மீது செலுத்தப்படற்பாலதான வரிவீதம் பத்து சதவீதம் என்ற வீதத்தில் இருத்தல் வேண்டும்;

(ii.) வருமானத்தின் இயைபான பாகத்தின் மீதமுள்ள பகுதியின்மீது செலுத்தப்படற்பாலதான வரிவீதம் இச்சட்டத்தின்கீழ் அவற்றுக்கு ஏற்புடையதான பத்து சதவீதத்துக்கு மேற்பட்ட அத்தகைய வரிவீதங்களுக்கிணங்க கணிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) வருமானத்தின் இயைபான பாகம் அத்தகைய வேதனாதிகள் கட்டணங்களின் தொகையை விஞ்சாவிட்டால், வருமானத்தின் முழு இயைபான பாகத்தின்மீதும் செலுத்தப்படற்பாலதான வரியானது, இச்சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், பத்துச் சதவீதம் என்ற வீதத்தில் இருத்தல் வேண்டும்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கான இரண்டாம் காப்பு வாசகத்தில் "8ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "8ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஆ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "8 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ்" என்னுச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "8 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஆ) பந்தியின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 131 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:–

"(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக–

"குறித்துரைக்கப்பட்ட ஆள்" என்பது –

(அ) 2000 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில்–

(i) வேறு எவரேனும் ஆளுக்கு வேறு ஏதேனும் பங்குடைமை முப்பதினாயிரம் ரூபாவிக்குக் குறையாமல் கூட்டு மொத்தமாக வரும் குறைத்துரைக்கப்பட்ட கட்டணத்தை அல்லது குறித்துரைக்கப்பட்ட கட்டணங்களை; அல்லது

(ii) இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாமல் கூட்டு மொத்தமாக வரும் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்களை,

தமது சொந்தச் சார்பில் அல்லது அதன் சொந்தச் சார்பில் அல்லது வேறு எவரேனும் ஆளின் சார்பில் அல்லது ஆட்கள் சார்பில் அல்லது பங்குடைமைகளின் சார்பில் அந்த வரிமதிப்பீட்டாண்டில் செலுத்தும் அல்லது வரவு வைக்கும் சாத்தியமுள்ள அல்லது அந்த வரிமதிப்பிட்டாண்டிற்கு அதனைச் செலுத்தியுள்ள அல்லது வரவு வைத்துள்ள எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்குடமை அல்லது ஆட்கள் குழு என்று பொருள்படும் : அத்துடன்

(ஆ) 2001 ஏப்பிறல் 1 ஆம் தேதி அல்லது அதன் பின்னர் தொடங்கும் எதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் தமது சொந்தச் சார்பில் அல்லது அதன் சொந்தச் சார்பில் அல்லது வேறு எவரேனும் ஆளின் சார்பில் அல்லது ஆட்கள் சார்பில் அல்லது பங்குடமையின் சார்பில் அல்லது பங்குடமைகளின் சார்பில் அல்லது பங்குடமைகளின் சார்பில் அந்த வரிமதிப்பீட்டாண்டில் செலுத்தும் அல்லது வரவு வைக்கும் சாத்தியமுள்ள அல்லது அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு நேர்முந்திய வரிமதிப்பீட்டாண்டில் ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாமல் கூட்டுமொத்தமாகவரும் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ள அல்லது வரவு வைத்துள்ள எவரேனும் ஆள், ஏதேனும் பங்குடமை அல்லது ஆட்களின் குழு என்று பொருள்படும் ; அத்துடன்

"குறித்துரைக்கப்பட்ட கட்டணம் என்பது" :-

(அ) 2000 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் விடயத்திற்கேற்ப, எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் பங்குடமையால் சுயேச்சையான ஒருதன்மையில் கொண்டுநடாத்தப்படும் அல்லது ஆற்றப்படும் ஏதேனும் தொழிலின் உயர்தொழிலின், வாழ்க்கைத் தொழிலின் வேறு செயற்பாடுகளின் நெறிமுறையின்போது அத்தகைய ஆளினால் அல்லது பங்குடமையால் வழங்கப்படும் சேவைகளுக்குப் பிரதிபயனாக குறித்துரைக்கப்பட்ட ஆளெவராலும் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை என்று பொருள்படும் என்பதுடன், அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆளினால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தரகையும், தரகுக் கூலியையும் அல்லது இவற்றையொத்த இயல்பினதான ஏதேனும் பணத்தொகையையும் உள்ளடக்கும்; ஆனால் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆளின் எவரேனும் ஊழியருக்கு அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆளினால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகையை உள்ளடக்காது; அத்துடன்

(ஆ) 2001 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில், விடயத்திற்கேற்ப, எவரேனும் ஆளினால் அல்லது பங்குடமையால் சுயேச்சையான ஒரு தன்மையில் கொண்டுநடாத்தப்படும் அல்லது ஆற்றப்படும் ஏதேனும் தொழிலின் உயர்தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் அல்லது வேறு செயற்பாடுகளின் நெறிமுறையின்போது வழங்கப்படும் சேவைகளுக்குப் பிரதிபயனாக அவ்வாண்டில் விடயத்திற்கேற்ப, அவ்வாளுக்கு அல்லது பங்குடமைக்கு எவரேனும் குறித்துரைக்கப்பட்ட ஆளினால் செலுத்தப்படற்பாலதான ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாத ஏதேனும் கூட்டு மொத்தமாகவரும் ஏதேனும் பணத்தொகை அல்லது எவையேனும் பணத்தொகைகள் என்று பொருளாகும் என்பதுடன், அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆளினால் ஏதேனும் தரகையும் தரகுக் கூலியையும் அல்லது இவற்றையொத்த இயல்பினதான ஏதேனும் பணத்தொகையையும் உள்ளடக்கும்; அல்லது அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆளின்கீழ் தொழில் முறையின்போது அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆளின் எவரேனும் ஊழியருக்கு அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆளினால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகையை உள்ளடக்காது.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 186 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "சொந்தக்காரர்" என்பதன் வரைவிலக்கணத்தில் "நிலவாடகைக்கு அல்லது வேறு ஆண்டுக் கட்டண விதிப்பனவுகளுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நில வாடைகக்கு அல்லது வேறு ஆண்டுக் கட்டண விதிப்பனவுக்கு" என்னும் சொற்களுகளை இடுவதன் மூலமும்;

(2) "தகைமைபெறும் பகிர்ந்தளிப்பு" என்பதன் வரைவிலக்கணத்தின் (ஆ) என்னும் பந்தியின் IIஆம் உட்பந்தியின் "8ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "8ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

14 முதன்மைச் சட்டவாக்கத்தின் 187ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :-

"2(அ) 2000 ஆம் ஆண்டு, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழான தொழில்முயற்சியொன்றின் முழு இலாபங்களையும் வருமானத்தையும் அல்லது அதன் ஒரு பாகத்தை குறித்துரைக்கப்படவொரு காலப்பகுதிக்கு 1979 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான வருமானவரியிலிருந்து விலக்களிப்பதற்கு ஏற்பாடு செய்கின்ற உடன்படிக்கையொன்றை இலங்கை முதலீட்டுச்சபை செய்துகொண்டிருந்து 2000 ஆம் ஆண்டு மாச்சு 31ஆம் தேதியன்று அத்தகைய குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் முடிவுறாதுள்ள பாகமொன்று எஞ்சியுள்ளவிடத்து (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்றேல் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கக்கூடிய அத்தொழில் முயற்சியின் இலாபங்களினதும் வருமானத்தினதும் விடயத்திற்கேற்ப முழுமை

அல்லது பாகம் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் அத்தகைய முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்திற்காக இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்" ; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைப் உட்புகுத்துவதன் மூலமும் :-

(3அ) 2000ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ இலங்கை அரசாங்கத்துக்கு அல்லது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 31ஆம் பிரிவின் 82) ஆம் உட்பிரிவின் (உஉ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் நிறுவனத்துக்கு அப்பந்தியிற் குறிப்பீடுசெய்ய்பட்ட -

(அ) ஏதேனும் கடனின் முதலைத் திருப்பிக் கொடுப்பதிலான ; அல்லது

(ஆ) ஏதேனும் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் மாதாந்தக் கொடுப்பனவுகள் என்றவகையிலான.

"ஏதேனும் தொகையை எவரேனும் தனியாள் செலுத்துமிடத்து, அத்தகைய தொகை, (1) ஆம் உட்பிரிவில் எது எவ்விதமிருப்பினும் ஆனால், மேற்சொல்லப்பட்ட பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, அத்தகைய சட்டம் வலுவில் தொடர்ந்திருக்கின்றது என்றாற்போன்று, 2000ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தனியாளின் வரிமதிப்பீடற்பாலதான வருமானத்திலிருந்து கழிக்கப்படற்பாலதாதல் வேண்டும்."

15. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை, அவ்வட்டவணையின் IIIஆம் பாகத்தில் "வரிவிதிக்கப்பாலதான வருமானத்தின் முதல் 500,000 ரூபாவுக்கு இல்லை" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் முதல் 500,000 ரூபாவுக்கு இல்லை" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

16. இதன்கீழான அட்டவணையின் IIIஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏதேனும் ஏற்பாட்டில், அவ்வட்டவணையின் IIஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் சொற்கள் அல்லது சொல்லமைப்பு தோன்றுமிடத்து, அச்சொற்களுக்கும் அல்லது சொல்லமைப்புக்கும் பதிலாக, அவ்வட்டவணையின் IIIஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட சொற்களும் அல்லது சொல்லமைப்பும் இடப்படுதல் வேண்டும்.

| நிரை I | நிரை II | நிரை III |
|---|---|---|
| 11(ஊ) | இச்சட்டத்தின் 17ஆம் 18ஆம் 19ஆம் அல்லது 20ஆம் பிரிவின் | இச்சட்டத்தின் 15ஆம், 17ஆம், 18ஆம், 19ஆம், 20ஆம் பிரிவின் |
| 14(2) | (XXII) அத்துடன் (XXIIஅ) என்னும் உட்பந்திகளில் | (XX) (XXII) அத்துடன் (XXIII) என்னும் உட்பந்திகளின் |
| 23(1) (ங) | அமைப்பதில் | அமைப்பதில் அல்லது ஒழித்துக் கட்டுவதில் |
| 32(3) | அத்தகைய வருமானத்தின் அத்தகைய பாகத்தின் | அத்தகைய வருமானத்தின் ஒரு பாகத்தின் |
| 32(3) (ஆ) | வருமானத்தின் இயைபான பாகத்தின் முழுமை மீதும் செலுத்தப் படற்பாலதான வரியானது | வருமானத்தின் அத்தகைய பாகத்தின் மீதும் செலுத்தற்பாலதான வரியானது |

| | | |
|---|---|---|
| 49 (1) (அ) | எவையேனும் வியாபாரப் பண்டங்கள் | எவையேனும் வியாபாரப் பண்டங்கள் |
| 61 (1) | விலைக்கோரிப் பெறப்பட்ட பகிரங்க கம்பெனி தவிர்ந்த) வரியுள்ள கம்பனி ஒவ்வொன்றும் | வதிவுள்ள கம்பெனி ஒவ்வொன்றும் |
| 76 (2) | அத்தகைய வியாபாரத்திலிருந்து வரும் வதிவற்ற அத்தகைய ஆளினது இலாபங்கள் தொடர்பில் | அத்தகைய வியாபாரத்திலிருந்து வரும் அவரது இலாபங்கள் தொடர்பில் |
| 76 (2) | அந்த வதிவுள்ள ஆள் அவரது முகவரானாற்போன்று | அந்தவதிவுள்ள ஆள் அவரது முகவரென்றாற்போன்று |
| 76 (3) | வதிவற்ற ஆளினால் அல்லது அவரின் சார்பில் சில்லறையாக விற்கப்படு மிடத்து | வதிவற்ற ஆளினால் அல்லது அவரின் சார்பில் கொண்டிருக்குமிடத்து |
| 86 (2) | கட்டுப்பணங்கள் அல்லாத வேறு வருமானத்தை | கட்டுப்பணங்கள் அல்லாத வேறு வருமானத்தை |
| 92 (3) | 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 82ஆம் பிரிவினதும் இச்சட்டத்தின் 92ஆம் பிரிவினதும் | 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணடாட்டரசிறைச் சட்டத்தின் 82 ஆம் பிரிவினதும் |
| 104 (1) (அ) | 98(1) ஆம் பிரிவின் கீழ் | 98 (2) ஆம் பிரிவின் கீழ் |
| 104 (1) (ஆ) | 98(2) ஆம் பிரிவின் கீழ் | 98 (1) ஆம் பிரிவின் கீழ் |
| 104 (1) (இ) | IIIஆம் பிரிவின் ஏதேனும் ஏற்பாட்டிற்கு | IIIஆம் பிரிவின் ஏதேனம் ஏற்பாட்டிற்கு |
| 105 (1) | செய்யப்படாமை எவ்வாறாயிருப்பினும் | செய்யப்படாமை எவ்வாறாயிருப்பினும் |
| 117 (3) | ஏதேனும் சம்பளகாலம் | ஏதேனும் சம்பளகாலம் |
| 171 (6) | 113 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் | 113 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் |

17. (பொதுநலவரசு அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துக்கு வருமானவரியிலிருந்து விலக்களிப்பை வழங்குகின்ற) 1999ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தின் 2ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான 1979ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு, 1996 சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாக எல்லா நோக்கங்களுக்கும் கருதப்படுதல் வேண்டும்.

18. ஈராயிரமாம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையானது தொழில் முயற்சியொன்றுடன் ஓர் உடன்படிக்கையைச் செய்திருந்து முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வருமான வரியிலிருந்து அத்தகைய தொழில்முயற்சியின் இலாபங்களினதும் வருமானத்தினதும் முழுமையையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை விலக்களிப்பதற்கு அந்த உடன்படிக்கையானது ஏற்பாடு செய்கின்றவிடத்து அத்தகைய விலக்களிப்பானது முதன்மைச் சட்டவாக்கத்தின் ஓர் ஏற்பாட்டினால் தொழில்முயற்சிக்கு வெளிப்படையாக வழங்கப்பட்டதென்றாற்போன்று, அத்தகைய உடன்படிக்கைத் தேதியிலிருந்து அத்தகைய விலக்களிப்பு செல்லுபடியுள்ளதாயும் பயனுள்ளதாயும் இருந்திருப்பதாகவும், இருப்பதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

19. இச்சட்டத்தின் 10 ஆம், 11ஆம் அத்துடன் 13ஆம் பிரிவுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், 2000 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டும்.

20. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.